# கேளுங்கள்.

## பாகம் 13

# பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்.
## ( பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள். )

*மாற்கு 11:22-24 இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.*
*23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*
*24 ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*
**“பெற்றுக்கொள்வோம்” ( receive )** என்ற வார்த்தை கிரேக்க வேதாகமத்தில் “அயோரிஸ்ட்” காலத்தில் இருக்கிறது. அதாவது ஏற்கனவே நடந்து அதன் தொடர்ச்சி, முடிவு இவைகளை குறிப்பிடாமல் இருப்பது. ஒரு ஆங்கில வேதாகம் ‘ பெற்றுக்கொண்டோம்’ என்று இதை மொழி பெயர்த்திருக்கிறது.

வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் பலரும் ஒரு முறைக்கு மேலாக ஒரு காரியத்துக்காக ஜெபித்திருக்கிறார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டில் ***மாற்கு 8:25* ல்** மாத்திரமெ, ஒரு சவுக்கியத்துக்காக இயேசு மற்றொரு முறை ஊழியம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு இதை செய்தது, தேவன் அவர் விண்ணப்பத்தை சரியாக கேட்க வில்லை என்பதற்காக அல்ல; இந்த மனிதனின் அவநம்பிக்கை அவன் சவுக்கியமாவதை தடுத்ததனால் ஒரு முறை கூட சுகமாக்கும் வல்லமையை கொடுக்கிறார்.

பலரும் பல காரியங்களுக்காக ஜெபித்துவிட்டு பின் தேவன் அதற்கு பதில் தந்திருக்கிறாரா என்று தங்கள் சூழ்நிலைகளை பார்க்கிறார்கள். இது காட்சியால் நடப்பது, விசுவாசத்தால் அல்ல ***( 2 கொரி 5:7 ).*** அவர்கள் தேவனுடைய பதிலை பார்க்க முடியாவிட்டால், அதே காரியத்தை தேவன் செய்வதற்காக மீண்டும் ஜெபிக்கிறார்கள். இப்படி கேட்டு பெற்றுக்கொள்ளும்படியாக இயேசு கற்பிக்கவில்லை ***( மாற்கு 11:22-24 ).*** இவ்வசனத்தின்படி, நாம் ஒரே ஒரு முறைதான் ஒரு தேவைக்காக தேவனிடம் கேட்க வேண்டும், அதன் பின் அதைப்பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசிக்க வேண்டும் ***( மாற்கு 11:24 ).*** நாம் மீண்டும் கேட்டால், முதலாவது கேட்ட போதே பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசிக்க வில்லை என்று அர்த்தம். என்றாலும் ஜெபத்துக்கான பதிலை காண்பது வரை தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருக்க வேண்டும். **ஜெபம் என்பது தேவைகளை தேவனிடம் கேட்பது மாத்திரம் அல்ல; துதிப்பது, நன்றி சொல்வது, தேவனோடு பேசுவது**.....

நாம் எப்போது விசுவாசிக்க வேண்டும் என்றால், **“ஜெபம் பண்ணும்போது**”; அப்போது நாம் கேட்டது **“உண்டாகும்”**. இது எதிர்காலத்தை குறிப்பிடுகிறது. இதற்கான சமயம் ஒரு நிமிடமாகவோ அல்லது அதிக சமயமாகவோ இருக்கலாம். தேவனது சித்தத்தின்படி கேட்கப்படும் எந்த ஜெபத்துக்கான பதிலையும் தேவன் உடனடியாக கொடுக்கிறார் ***( மத் 7:7 ),*** ஆனால் அவர் ஆவிக்குரிய உலகத்தில் இதை செய்கிறார், இது நமது பௌதீக புலன்களுக்கு உடனடியாக புலப்படுவது இல்லை ***( மத் 7:8 ).*** விசுவாசத்தால், தேவன் நம் ஜெபங்களுக்கு பதில் தந்திருக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும். அப்படி விசுவாசிக்காமல் இருப்பது அவநம்பிக்கையாகும், இது நமது ஜெபங்களில் கேட்டவற்றை பெற்றுக்கொள்ளாமல் தடை செய்து விடும் ***( யாக் 1:5-7 ).*** ‘விசுவாசம்’தான் நாம் கேட்டவற்றின் உறுதி, நாம் பார்ப்பது அல்ல ***( எபி 11:1 ).***

**Bro D.Vergin kumar,**

**To continue..**